2005 ஏப்ரல் 4]

தனியார் நெசவாளர்கள் அவர்கள் விருப்பப்படுவதுபோல் எங்கு வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம். ஆனால், நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே மட்டும் வாங்கக்கூடிய அந்த ஜரிகையின் தரம், தனியார் உற்பத்தி செய்யக்கூடிய அந்தச் சேலையிலே இருக்கக்கூடிய ஜரிகையினுடைய தரத்தைவிட மிக உயர்ந்த தரத்தை நாம் போடுகிறோம். உங்களுக்கு இன்னும் நான் சரியாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தனியார் நெசவாளர் மக்கள் வாங்கக்கூடிய அந்த ஜரிகைகளில் தங்கம், gold content 4.8 per cent இருக்கும். ஆனால், நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே கொள்முதல் செய்யக்கூடிய அந்த ஜரிகைகளிலே gold content 5.7 per cent இருக்கும். ஆக, முதல்தரமான ஜரிகையைத்தான் நம்முடைய கூட்டுறவுச் சங்கங்களிலே பயன்படுத்துகிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 283, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

283—

பாதாளச் சாக்கடை

***17193—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி பேரூராட்சியில் கழிவுநீரை அகற்ற பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி சிறப்புச் சிற்றூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்க போதுமான சாலை வசதிகள் இல்லாததாலும், கழிவுநீரை அகற்றி ஓரிடத்தில் சேகரிக்கப் போதுமான இடவசதி இல்லாததாலும், சிறப்புச் சிற்றூராட்சியின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டும், பேராவூரணி சிறப்புச் சிற்றூராட்சியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் ஏதும் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி வளர்ந்து வருகின்ற நகரம். அந்த நகரத்திலே உள்ள கழிவுநீரை நகரத்தை விட்டு வெளியேற்றிட ஒரு திட்டமிட்ட வடிகால் அமைப்புகள் இல்லாததினாலே, அந்த நகரத்திலே சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரக் கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த பேராவூரணி பேருராட்சிப் பகுதிக்கு பாதாளச் சாக்கடை அமைக்க முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி சிறப்புச் சிற்றூராட்சியின் கடைத் தெருவு, மெயின் ரோடில் கழிவுநீர்க் கால்வாய் கட்டுவதற்கு ரூபாய் 20 இலட்சம், பாதாளச் சாக்கடை கட்டுவதற்கு ரூ. 3 கோடி தேவைப்படும். இச்சிறப்புச் சிற்றூராட்சியில் போதிய நிதி வசதி இல்லாததாலும், இத்திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து நிதி வசூல் செய்யக் கூடிய சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லாததாலும், இப்பணிகளை தற்போது செயல்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே, பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டத்தினை தற்போது செயல்படுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி நகரம் ஏறக்குறைய 25 வார்டுகளைக் கொண்ட பகுதி. அங்கே ஏறக்குறைய 35,000–க்கும் அதிகமான பொதுமக்கள் வசிக்கின்றார்கள். இந்தக் கழிவுநீர் அகற்றப்படாத காரணத்தினாலே, சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு அங்கே தினந்தோறும் கொசுக்கடி மற்றும் சுகாதாரக் கேடு, பல்வேறு தீமைகள் எல்லாம் ஏற்படுகின்ற நிலைமை இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பாதாளச் சாக்கடை அமைக்கவில்லை என்றாலும், அந்த நகரம் முழுவதும் இருக்கின்ற கழிவுநீரை வெளியேற்றுகின்ற வகையிலே, அந்த நகர் முழுவதும் திறந்தவெளி சாக்கடை வடிகால் வாய்க்கால் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, அந்த சிறப்புச் சிற்றூராட்சியினுடைய நிதிநிலையைச் சீர் செய்தவுடன், அந்தப் பகுதியில் இருக்கின்ற கழிவுநீரை வெளியேற்றுவதற்குண்டான ஆயத்தப் பணிகள் குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று கூறுகின்றேன்.

2005 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா. கந்தசாமி.

திரு. கா. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க 23 ஆண்டுகளுக்கு முன்பு மறைந்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. சேலம் மாநகரின் பொதுமக்கள் நலன் கருதி, சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பணியானது இப்பொழுது மேற்கொள்ளப்பட்டு, மிக விரைவில் அந்தப் பணி முடிப்பதற்குண்டான ஆயத்தப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவினுடைய நல்லாட்சியிலே, மாவட்டத் தலைநகரங்களாக இருக்கக்கூடிய நகரங்களில் எல்லாம் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமென்று ஏற்கெனவே இந்த அவையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே பேராவூரணிக்குப் பக்கத்திலே புதுக்கோட்டை நகராட்சி இருக்கிறது. புதுக்கோட்டை நகராட்சியிலே 39 வார்டுகள் இருக்கின்றன. அந்த 39 வார்டுகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் செயல்படுத்துவதற்கான கருத்துரு அரசினுடைய தீவிர பரிசீலனையில் இருக்கிறது. ஆக, அந்தத் திட்டம் எப்பொழுது தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக, மாண்புமிகு அமைச்சரிடத்திலே அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவிப்பின்படி ஐந்து இடங்களிலே – மாவட்டத் தலைநகரங்களிலே பணியானது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும், இருக்கின்ற இடங்களிலே கூடிய விரைவில் அந்தப் பணியானது மேற்கொள்ளப்படும் என்பதைக் கூறி அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: செல்வி சி. கனகதாரா.

செல்வி சி. கனகதாரா: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பேரணாம்பட்டு தொகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மிகுதியாக இருந்துவருகின்றன. உலகிலேயே புகழ்பெற்ற பேரணாம்பட்டு நகரம் வர்த்தக நகரமாக இயங்கி வருகிறது. இந்த நிலையில் கழிவு நீர்க் கால்வாய்கள் ஆங்காங்கே தேங்கிக் கிடப்பதாலும், அது பாதுகாக்கப்பட்ட குடிநீரில் கலந்து விடுவதாலும் டெங்கு போன்ற வியாதிகள் பரவுவதற்கு ஏதுவாக இருக்கிறது. இந்நிலையில் பேரணாம்பட்டு தொகுதி நகராட்சியிலே இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் தொடங்குவதற்கு செயற்குறிப்பு ஒன்று இருப்பதாக அறிய வந்தேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் எப்போது அமலுக்கு வரும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய நான் விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல கழிவுநீரானது குடிநீரோடு எங்கும் கலப்பதில்லை. அப்படி ஏதேனும் சந்தர்ப்பச் சூழ்நிலையில் அந்த நிகழ்வு ஏற்பட்டால் உடனுக்குடன் கண்டறியப்பட்டு அது நிவர்த்தி செய்யப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 284, திரு. வி.ஆர். ராஜாங்கம், மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

284—

குடிநீர்

***20172—திரு. வி.ஆர். ராஜாங்கம்:**

மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வைகை அணையிலிருந்து நீரேற்று இயந்திரம் மூலமாக மதுரை வடகரைப் பகுதிக்கு வழங்கப்படுகின்ற குடிநீரின் அளவு குறைவாக உள்ளதால், வைகை அணையிலிருந்து நேரடியாக குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS